**Minutes of Public Hearing held on 09.11.2022 at 11:00 AM in Chandirattiar Mahal, located at 7/153,Ambai Road, Kalathimadam, Koothapanjan Village, Alangulam Taluk Tenkasi District with respect to the project of M/s.G.Karuppasamy Rough Stone, Jelly & Gravel Quarry,– S.F.No. 35/4A, 4B, 4C, 4D, 4E, 4F,4G,4H &4I, Maruthamputhur Part-1 Village, Alangulam Taluk, Tenkasi District**

**Details of participants in this meeting:**

1. Mrs. V. Gangadevi - Revenue Divisional Officer, Tenkasi, Tenkasi District.
2. Mrs.C.Suyambu Thangarani - District Environmental Engineer Tirunelveli
3. Public and Government officials - Details are attached(Annexure-1)

District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli welcomed the Revenue Divisional Officer who came to preside over Public hearing and all the people and government officials who were present in the meeting. Then, Tenkasi Revenue Divisional Officer invited the public to give their name and comments one by one after hearing explanation about project by Project Consultant.

Following this, Mr. B. Swaminathan , Project Consultant for the proposed M/s G.Karuppasamy Rough Stone, Jelly & Gravel Quarry explained the project details to the public through Power Point Presentation.

After that, the public began to express their views which are as follows:-

**1. Mr. Karuppiah Pudupatti village, Kasinathapuram :-**

He informed that there is a possibility for employment to the public of this village, here most of them are employed as mason, supporting workers, vehicle operator and Beedi workers especially the ladies. He also informed that this quarry is benefit to the public as it brings employment opportunity so that he has no objection about this project.

**2. Tmt. Parvathy, Pudupatti village, Kasinathapuram:-**

She informed that we have no objection and we feel happy as the quarry brings employment to them.

**3. Mr. Kathiresan, Pudupatti village, Kasinathapuram:-**

He informed that quarry is already operated in the site and their economic condition will be improved due to this new project, He also informed that public earns more money due to quarry and it gives employment in construction side, so that there will be an upliftment of their villagers and hence no objection on this project

**4. Mr. Mangannu, Odaimarichan :-**

He informed this new quarry will enable construction of houses and they believe the proponent will do more help to the public. He also informed that they will get building material from this quarry on credit for construction of houses so that there will not be any difficulties in construction of houses so that it will be helpful if quarry comes.

**5. Mr. Vel duraisamy, Pudupatti village, Kasinathapuram:-**

He informed that surrounding people will get employment and their economic status will be improved and complete due to this quarry project. He also informed that this quarry is helpful as school children deserves help and public will get benefits through conducting of common medical camp so that this project will be benefit to the public.

**6. Mr. Balvinayagam, Pudupatti village President:-**

He informed that this quarry project is located in Maruthamputhur Panchayat and quarry has been functioning for the last 15 years, which provides employment to more than 50 people of surrounding villages. He also informed that there will be more employment opportunity to the public if the quarry project comes here.

**7. Mr. Ravichandran, Pudupatti village, Kasinathapuram:-**

He informed that he is a coolie employee and he requested for the quarry to come as it provides employment opportunity to the public.

At the end, the District Environmental Engineer, Tirunelveli has informed that all the views of the public will be recorded and will be sent to Tamil Nadu Government State Level Environmental Impact Assessment Authority through TNPCB, Corporate Office, Chennai and the meeting came to an end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Tirunelveli.

Revenue Divisional Officer,
Tenkasi.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், மருதம்புத்தூர் - 1 கிராமம், புல எண்கள்: 35/4A, 4B, 4C, 4D, 4E, 4F, 4G, 4H & 4I, அமையவுள்ள தி/ள். G. கருப்பசாமி ரப் ஸ்டோன் ஜல்லி மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 09.11.2022 அன்று முற்பகல் 11:00 மணியளவில் தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், குத்தப்பாஞ்சான் கிராமம், காளத்திமடம் 7/153, அம்பை ரோட்டில் அமைந்துள்ள சந்திராட்டியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நிகழ்வின் சுருக்கம்:-

இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி. வீ. கங்காதேவி | - | வருவாய் கோட்டாட்சியர், தென்காசி, தென்காசி மாவட்டம். |
| 2. | திருமதி. செ. சுயம்பு தங்கராணி | - | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திருநெல்வேலி |
| 3. | பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் | - | விபரம் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு - 1) |

---000---

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தை தலைமையேற்று நடத்த வருகை தந்த மாவட்ட வருவாய் அலுவலர், கலந்து கொள்ள வந்துள்ள பொதுமக்கள், அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்றார். பின்பு பேசிய தென்காசி வருவாய் கோட்டாட்சியர், கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பான பொருள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை, திட்டத்தினைக் குறித்த விளக்கம் தெரிவித்தபின் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் கருத்துக்களை பதிவு செய்ய அழைப்பு விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து இத்திட்டத்தினை குறித்த விளக்கங்களை தி/ள். G. கருப்பசாமி ரப் ஸ்டோன் ஜல்லி மற்றும் கிராவல் குவாரி ஆலையின் திட்ட ஆலோசகர், திரு. பி.சுவாமிநாதன் புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் மக்களுக்கு விளக்கினார்.

அதனைத் தொடாந்து பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைக்கத் தொடாங்கினார்கள், அவை பின்வருமாறு:-

1. திரு. கருப்பையா, புதுப்பட்டி கிராமம், காசிநாதபுரம் :-

இந்த கல்குவாரி புதிதாக வருவதினால் எங்கள் ஊர் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. பெண்கள் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறார்கள். ஆண்களில் பெரும்பாலோர் கொத்தனார், கையாள் மற்றும் வண்டி வேலைக்கு செல்கிறார்கள். ஏற்கனவே, இந்த குவாரி இருப்பதினால் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது, மேலும் வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆகையினால் இந்த குவாரியினால் தீமை ஏதும் கிடையாது. நன்மைதான். எனவே குவாரி வருவதினால் எந்த ஆட்சேபனை எதுவும் இல்லை என்பதாக கூறினார்.

2. திருமதி பார்வதி, புதுப்பட்டி கிராமம், காசிநாதபுரம் :-

இந்த குவாரி வருவதினால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் கிடையாது. வேலை வாய்ப்பு கிடைக்கு என நினைக்கிறோம். எனவே வேலை வாய்ப்பு கிடைப்பதினால் எங்களுக்கு சந்தோஷம் எனக் கூறினார்.

3. திரு. கதிரேசன், புதுப்பட்டி கிராமம், காசிநாதபுரம்:-

ஏற்கனவே இந்த குவாரி அந்த இடத்தில் செயல்பட்டு கொண்டிருக்கிறது. மேலும் விரிவடையும் போது எங்களுடைய பொருளாதாரம் முன்னேறும். இது மக்களுக்கு அதிகமான வருவாய் ஈட்டும் தொழிநாக நடந்து கொண்டிருக்கிறது. இதனால் கட்டுமான பணிகள் நடைபெறுவதால் வேலை வாய்ப்பு கூடுகிறது. இது மட்டுமல்லாமல் வாழ்க்கைத்தர முன்னேற்றத்திற்கு அதிக வருவாய் கொடுக்கும் என நம்புகிறோம். இதனால் எங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்பதாகக் கூறினார்.

4. திரு மாங்கண்ணு, ஓடை மறிச்சான்.

இந்த குவாரி அமைவதினால், வீடு கட்டுவதற்கு ஏதுவாக இருக்கும், மேலும் பல நன்மைகள் செய்வார்கள் என நம்புகிறோம். செய்வார்கள் என நம்புகிறோம் கட்டுமான பொருட்கள் வாங்கி பின்பு கூட பணம் கட்டிக்கொள்ளலாம், வீடு கட்டுவதற்கு சிரமங்கள் இல்லாத அளவிற்கு இந்த குவாரி அமைந்தால் மக்கள் அனைவருக்கும் வசதியாக இருக்கும் என்பதாக கூறினார்.

5. திரு. வேல்துரைச்சாமி காசிநாதபுரம்.

இந்த குவாரி அமைவதில் சுற்று வட்டார மக்களுக்கு வேலை வாய்ப்பும், குடும்ப பொருளாதாரமும் உயர்கிறது, வாழ்க்கை முழுமையாக பூர்த்தி அடைகிறது என்பதாக தெரிவித்தார். குவாரி மூலம் பள்ளிக்கூட குழந்தைகளுக்கு உதவியும், பொது மருத்துவ முகாம் நடத்துவதன் மூலம் பொதுமக்கள் பயன் அடைகின்றனர், எனவே இந்த குவாரி பொது மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதாக கூறினார்.

6. திரு. பால்விநாயகம் புதுப்பட்டி ஊராட்சி தலைவர்

மருதம்புத்தூர் ஊராட்சிக்குட்பட்ட கல்குவாரி புதியதாக ஆரம்பிக்க இருக்கிறார்கள். ஏற்கனவே 15 வருட காலங்களாக குவாரி நடந்து கொண்டிருக்கிறது. சுற்று வட்டாரத்திலுள்ள 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இங்கு வேலை பார்த்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் குவாரி வந்தால் பொது மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதாக கூறினார்.

7. திரு ரவிச்சந்திரன் புதுப்பட்டி கிராமம், காசிநாதபுரம்:-.

அவர் தான் ஒரு கூலி தொழிலாளி, மருதம்புத்தூரில் குவாரி வந்தால், எங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், எனவே இந்த குவாரி வருவதற்கு வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர் பேசிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு சென்னை வாரிய தலைமை அலுவலகம் மூலம் தமிழக அரசு சுற்றுச்சூழல் துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்து வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி.

வருவாய் கோட்டாட்சியர் ,
தென்காசி.